தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 12, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 26, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு."

நீதிநெறி முறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில் பருவ மழையும், குறையாத விளைச்சலும் ஒருசேர நிறைந்திருக்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

தார்ச் சாலை அமைத்தல்

***27514—திரு. அ. ராமு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகராட்சி, டைகர்ஹில் பகுதி, 4–வது வார்டிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் மீண்டும் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 26

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள், குன்னூர் நகராட்சி, டைகர்ஹில் பகுதி, 4—வது வார்டிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு சொந்தமான இடத்தில் கனரக வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக தார்ச் சாலை அமைக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட டைகர்ஹில் காப்புக் காட்டுப் பகுதியில், இச்சாலை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினரால் தொழிற்சாலை உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1.50 கி.மீ. நீளமும் 3.00 மீட்டர் அகலமும் கொண்ட இந்தத் தார்ச் சாலையை அமைக்க, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் போதிய நிதி ஆதாரம் இருக்கும்பட்சத்தில், விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்துவம் மிக்கவராக இருந்தவரும், நம் நினைவில் என்றும் நீங்காமல் இருப்பவரும், பாசத்திற்கு உறைவிடமாகத் திகழ்ந்தவரும், ஊர் உலகு வியக்கும் வண்ணம் ஆட்சித் தேரைச் செலுத்தியவரும், உழைப்பால் உயர்ந்தவருமான புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா அமைத்துத் தந்த ஆட்சிப் பீடத்தைத் திறம்பட நிருவகித்துக் கொண்டிருக்கும் எளிமை நாயகன், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். அவர்களுக்கு உற்றதுணையாக நின்று, நேர்த்தியான ஆட்சி நடைபெற உதவி புரிந்துகொண்டிருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். நீலகிரிவாழ் மக்களைத் தன் மக்களாக நினைத்துத் தனிக் கவனம் செலுத்திவரும் அண்ணன், மாண்புமிகு உள்ளாட்சித்

2018 ஜூன் 26]

துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். நான் சார்ந்த குன்னூர் தொகுதி மக்களையும் இந்த நல்ல நேரத்தில் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் நகராட்சி, டைகர்ஹில் பகுதி, தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான பகுதி. அது 150-க்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வசித்துவருகின்ற பகுதி. அந்த இடத்திற்குத்தான் தார்ச் சாலை அமைக்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. கனரக வாகனங்கள் செல்வதற்காக அல்ல. அந்தப் பகுதி இப்பொழுது வாகனங்கள் செல்லக்கூடிய நிலைமையில் இல்லை. பொது மக்கள் அவசர காலத்தில் சிகிச்சைக்காகக் கூட செல்ல முடியாத நிலையில் அந்தச் சாலை உள்ளது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாரியத்தில் நிதி ஆதாரம் இல்லாதபட்சத்தில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, குன்னூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுமதி தரும்பட்சத்தில், இந்தத் தார்ச் சாலை அமைக்க அரசு முற்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, அந்தச் சாலை வழிக்கான அனுமதி உரிமம்* (Right of Way) *இல்லாத காரணத்தினால், வனப் பாதுகாப்புச் சட்டம், மத்திய அரசின் இணையதளத்தின்மூலம், அந்தப் பணியைச் செய்கின்ற சம்பந்தப்பட்ட* user agencies *அனுமதி பெற்று, அதற்குரிய சூழ்நிலைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட*

தெங்குமரஹடா ஊராட்சி சுமார் 3,000 பேர் வசிக்கக்கூடிய, 10 குக்கிராமங்கள் உள்ள பகுதி. இந்தப் பகுதி 1,000–க்கும் மேற்பட்ட பழங்குடியின இருளர் மக்களும், 400–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்களும் வசிக்கக்கூடிய ஒரு பகுதி. அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. அந்த தெங்குமரஹடா பகுதி நீலகிரி மாவட்டத்திற்குச் சொந்தமான பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவ மாணவிகள் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மேற்படிப்புக்குச் செல்ல வேண்டுமானால், ஈரோடு வழியாகத்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, அந்தப் பழங்குடியின மக்களும், ஆதி திராவிட மக்களும் அவர்களின் மேல் சிகிச்சைக்காகவும், பள்ளி மேற்படிப்பிற்காகவும் விவசாயப் பொருட்களை எடுத்துச் செல்லவும், ஏதுவாக அங்கு தார்ச் சாலையை அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள் குறிப்பிட்ட அந்த தெங்குமரஹடா பகுதி என்பது, அவரே குறிப்பிட்டதைப்போல, சத்தியமங்கலம் கோட்டத்தில் உள்ளது. அந்தப் பகுதியானது ஈரோடு மாவட்டத்தில் வருகிறது. இந்தச் சாலை புலிகள் சரணாலயத்தில் core zone பகுதியில் அமைந்துள்ளதால், NTCA விதிகளின்படி core zone பகுதியில் எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளக் கூடாது என்று மத்திய அரசின் தடை இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாணவர்கள் மற்றும் மற்றவர்களின் நிலையை அனுசரித்து, அங்கு சாலை அமைக்க சிறப்பு அனுமதி வாங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அந்தப் புலிகள் சரணாலயத்தில், core zone பகுதியில் சாலை அமைப்பதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு தயாராக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

2018 ஜூன் 26]

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் கிட்டத்தட்ட 3,000–க்கும் மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளர்களும், 7,000–க்கும் மேற்பட்ட தற்காலிக தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள். தற்போது அங்கு நிதி நெருக்கடியின் காரணமாகவும், அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமலும், அந்த நிறுவனத்தின் நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைக்கப் போவதாகச் சொல்கிறார்கள். இதனால், கம்பெனிகள் சட்டம், 1957–ன்படி* last *கட்டமான* wind up *செய்யக்கூடிய சூழ்நிலையை எட்டிவிடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வுரிமை பாதிக்கப்படும் நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்திற்கு போதுமான நிதியை, சிறப்பு நிதியை ஒதுக்க . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, நீங்கள் இதையெல்லாம் மானியக் கோரிக்கையின்போது பேச வேண்டும். இது தார்ச் சாலை அமைப்பது குறித்த கேள்வி. திரு. அ. ராமு, குன்னூர் தொகுதியைச் சேர்ந்தவர். நீங்களும் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் உங்களை துணை வினா கேட்க அனுமதித்தேன். ஆனால், நீங்கள் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறீர்கள். மானியக் கோரிக்கை நாளை மறுநாள் வருகிறது. அன்றைக்கு இதுகுறித்துப் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

212—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***19046—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியம், பாலூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை